## கிரிபாவ பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 26 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிரிபாவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணிக்கப்பட்ட 07 தொலைத்தொடர்பு கோபுரங்களில் இருந்து அறவிடவேண்டிய தரச் சான்றுதழ் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 438,150 தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | பெற வேண்டிய வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் உரிய சீராக்கங்கள் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | மீளாய்வண்டின் இறுதியில் பொது களஞ்சிய இருப்பு மீதி, இருப்பு பதிவேட்டின் பிரகாரம் ரூபா 1,056,621 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 719,310 ஆக இருந்தமையால் ரூபா 337,311 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளை இனங்கண்டு சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் உரிய சீராக்கங்கள் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 37 மயான நிலங்கள் மற்றும் 11 பொது காணிப் பகுதிகள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு | சபைக்கு உரித்தாகவுள்ள காணிகளின் உரித்தை | எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது அந்த பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கு வைக்கப்படவில்லை. | கையேற்று பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படல் வேண்டும். | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்து.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானி பத்திரம் | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு கோபுரங்களில் இருந்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வுர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களில் இருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 326,804 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 259,139 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 415,000 | 457,260 | 457,260 | - | 385,000 | 390,845 | 390,845 | - |
| (ii) | வாடகை | 2,710,400 | 3,049,865 | 3,049,865 | 220,603 | 2,938,600 | 3,520,480 | 3,520,480 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 415,000 | 397,150 | 397,150 | - | 410,000 | 410,000 | 373,825 | 36,175 |
| (iv) | ஏனைய வருமானம் | 37,390,004 | 33,306,111 | 7,244,780 | 4,358,586 | 8,990,000 | 8,990,000 | 4,139,557 | 4,850,443 |
| | மொத்தம் | 40,930,404 | 37,210,386 | 11,149,055 | 4,579,189 | 12,723,600 | 13,311,325 | 8,424,707 | 4,886,618 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அபிவிருத்தி அடைந்த நகர பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி வலயம் ஒன்றாக பெயரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அபிவிருத்தியடைந்த நகர பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி வலயமாக பெயரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி அடைந்த நகர பிரதேசம் ஒன்று என தற்போது இனங்காணப்பட்டிருந்ததுடன் பொதுக்கூட்ட தீர்மானம் எடுத்ததன் பின்னர் விரைவாக அந்தப் பிரதேசத்தையும் உள்ளடக்கி ஆதன வரி வலையமொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.3 வாடகை**

**(அ) கடை வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | உடன்படிக்கை செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக கிரிபாவ பேருந்து நிலையத்தில் 02 கடைகள், பெரகும்புர இல் 01 கடை, ஹத்திகுச்சியில் 04 கடைகள் என 07 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறியவர்களுக்கு எதிராக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிரிபாவ பிரதேச சபைக்குரிய ஆதனங்களை உப வாடகைக்கு வழங்குதல் சட்ட விரோத செயற்பாடாக இருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக உடன்படிக்கை செய்யப்பட்ட வாடகையாளர்களுக்கு அறிவித்ததன் பின்னர் கிரிபாவ பேருந்து நிலையத்தின் 02 கடைகள் மற்றும் பெரகும்புரயில் 03 கடைகள் வாடகையாளர்களினால் நடாத்திச் செல்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. உப வாடகைக்கு வழங்கப்பட்ட ஹத்திக்குச்சியில் 04 கடைகளுக்காக 2019/02 சுற்றறிக்கையைப் பின்பற்றி அந்த உப வாடகையாளர்களுக்காக புதிய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அது தொடர்பாக 2019.05.08 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்ட தீர்மான இலக்கம் 6/2019/14/03 இன் கீழ் அந்த முன்மொழிவை சபை அங்கீகரித்திருந்தது. |
| (ii) | உடன்படிக்கை கைச்சத்திட்ட 07 வாடகையாளர்களினால் 2006 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 07 கடைகள் சபைக்கு அறிவிக்காமல் வெளித்தரப்பினருக்கு ரூபா 2,030,000 தொகையில் விற்பனை | உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிரிபாவ பிரதேச சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட 07 வாடகையாளர்களில் ஏனைய தரப்பினர்களுக்கு கடைகளை கையளித்திருந்ததுடன் 2019/02 புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய கடை உரிமையாளர்களுக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு கடைகளைக் கையளிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்பயன் படும். |

### 2.2.4 வியாபார அனுமதிப்பத்திரம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றிருந்த 13 நிறுவனங்கள் வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை | குறித்த திகதிக்கு முன்னர் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பபட வேண்டும். | இந்த வியாபாரிகளுக்கு வியாபார அனுமதிப்பத்திரத்தைக் எடுத்துச்செல்லுமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்ட்டிருந்த போதிலும் வியாபார அனுமதிப் பத்திரத்தை எடுத்துச் செல்வதற்கு வந்திருக்கவில்லை. எனினும் பிரதேசத்தின் வருமானத்தை சேகரிப்பதன் மூலம் உரிய வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் பெறப்பட்டது. இது வரையிலும் தபால் மூலம் வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு முதல் தபால் மூலமேனும் வியாபார அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 வது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் | பிரதேச சபையின் தேவையின் பிரகாரம் உப விதிகளை விதிப்பதற்கு | அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. சபையின் தேவையின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| திகதி வரையிலும் சபையின் தேவையின் பிரகாரம் எந்தவொரு உப விதியும் விதிக்கப்படாதிருந்த போதும் அங்கீகரிக்கப்பட்ட உப விதி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உப விதிகளை விரைவாக விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கைவிடப்பட்டுள்ள இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் ''எக்கமகட்ட எக் வெடசடஹனக்'' (ஒரு கிராமத்திற்கு ஒரு நிகழ்ச்சித் திட்டம்) இன் கீழ் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 352,432 தொகை செலுத்தப்பட்ட பதனேவ முன்பள்ளி பாடசாலைக் கட்டிடத்தின் நிர்மாணங்களின் அத்திவாரத்துடன் மாத்திரம் நிறுத்தப்பட்டிருந்தது. | உரிய செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிரிபாவ பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட ''எக்கமகட்ட எக் வெடசடஹனக்'' 2014 இன் கீழ் ரூபா ஆறு இலச்ச நிதி ஏற்பாட்டின் கீழ் பதனேவ முன்பள்ளி பாடசாலைக் கட்டிடம் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. ஒதுக்கப்பட்ட நிதியின் பிரகாரம் கட்டிடத்தின் ஒரு பகுதி வேலையை மாத்திரமே செய்யக்கூடியதாக இருந்தது. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.2.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற ரூபா 1,536,300 பெறுமதியான 02 சொத்துக்கள் எந்தவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் பயனற்ற நிலையில் காணப்பட்டது. | விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்களை பழுது பார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கெப் வண்டி மற்றும் தண்ணீர் பௌஸர் என்பவற்றை பழுது பார்ப்பதற்காக மாகாண நிர்வாக இயந்திர பொறியியலாளரின் மாதிரிகளின் கீழ் கூறு விலை கோரப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

**ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையிலிருந்து விலக்கப்பட்ட மற்றும் இடமாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து 06 வருடம் முதல் 29 வருட காலத்தில் தீர்க்கப்படாது காணப்பட்ட கடன் மீதி ரூபா 33,888 ஆகும். | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்காக உரிய நிறுவனம் மற்றும் பிணைகாரருக்கு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.4 பெறுகை

### 3.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |

### 3.4.2 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கூறு விலை கோரப்படாமல் 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 423,790 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும். |

### 3.4.3 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழச்சித் திட்டத்தின் கீழ் செரசும்ஹல கிராம உத்தியோகத்தர் பிரிவில் இரண்டு வீதிகளுக்கு சிறு கொங்கிரீட் கற்கள் இட்டு மீளமைப்பதற்கு ரூபா 3,735,732 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் பௌதீக பரீட்சிப்பு சந்தர்ப்பம் வரையிலும் வீதியின் இரு பக்கமும் கொங்கிரீட் தட்டுக்கள் குறித்த பிரகாரம் 1:2:4 (3/4) கலவையில் நிர்மாணிக்கப்படாமையினால் இலகுவாக உடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது. | குறித்த கலவையில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நலிவான நிலையில் உள்ள பகுதிகள் வெட்டி அகற்றப்பட்டு மீண்டும் 1:2:4 (3/4)'' அங்குல கொங்கிரீட் கலவையில் ஒப்பந்த சங்கத்தை வருவித்து அமைக்குமாறும் அதன் பின்னர் நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்க மாணியத்தின் கீழ் கிரிபாவ சந்தை வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 498,912 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் பௌதீக பரிசோதனை சந்தர்ப்பம் வரையிலும் வீதியின் சில இடங்கள் கீழிறங்கி வீதிக்கு சேதம் ஏற்பட்டிருந்தது. | கீழ் இறங்கியுள்ள இடங்கள் மீண்டும் அமைக்கப்பட வேண்டும். | இந்த வீதி கிரிபாவ வாராந்த சந்தைக்காக உட்பிரவேசிப்பதற்கு காணப்படுகின்ற பிரதான நுழைவு வழியாக இருந்தமையினால் வாராந்த சந்தைக்காக வருகை தருகின்ற சகல வாகனங்களும் இந்த வீதியில் பயணம் செய்கின்றது. அதன் பிரகாரம் வீதியின் மரங்கள் அகற்றப்பட்ட பகுதி ஏனைய இடங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் சிறு அளவில் கீழ் இறங்குவதற்கு உட்பட்டிருந்தது. நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் அந்த இடங்களை ஒப்பந்த சங்கம் ஊடாக சரியான பிரகாரம் தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆம் ஆண்டு சமூக நீர் செயற்பாட்டின் நிதி ஏற்பாட்டின் கீழ் தம்முத்த நீர் செயற்திட்டத்திற்காக ரூபா 730,573 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் டீ 1 முதல் டீ 11 வரையான வேலை விடயங்களும், சீ1 முதல் சீ12 வரையான வேலை விடயங்களும், நிறப் பூச்சுக்களும் உரிய பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நிர்மாணங்களின் குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டும். | பொறியியலாளர் ஆலோசனையின் அடிப்படையில் வேலை இலக்கம் D-1 முதல் D-11 வரையான வேலை விடயங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் ஒப்பந்த சங்கத்தினால் சரி செய்வதற்கு அல்லது அவ்வாறில்லையானால் அவ்வாறில்லாத பிரதேசங்களை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். சகல குறைபாடுகளும் சரி செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |